# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்

CC. 12/2021
PW2
நாள். 26.09.2025
பெயர்: அம்பிகாவதி
த/பெ : குமரேசன்
ஊர் : பெருமாநாடு

(எதிரி ஆஜர் இல்லை .எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 26th day of September 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**அ.சா. 2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் எந்த இடத்தில் இருந்தேன் என்றால் விபத்து நடந்த ரோட்டில் இருந்தேன். நான் நின்றதாக சொல்லக்கூடிய இடத்திற்கும், விபத்து நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கும் சுமார் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 20 அடி துாரம் இருக்கும். நான் நின்ற இடம், விபத்து நடந்ததாக சொல்லக்கூடிய இடம் பெருமாநாடு கடை வீதி என்பதால் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடம் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபரின் உறவினர்களான அவரது தாத்தா,பாட்டி,அப்பா, அம்மா, அத்தை ஆகியோர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான்.

2. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் ஆசை தம்பி என்பவர் இருந்தார். விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் வாகனம் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தது என்ற விவரம் மேற்சொன்ன ஆசைதம்பி என்பவருக்கு தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எந்த வாகனம் மோதியது என்ற விவரம் கூறியுள்ள நிலையில் அந்த வாகனத்தின் நிறம் என்ன என்பது குறித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன விபத்தில் இறந்து போன குழந்தை எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி ரோட்டை கடந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. விபத்தில் இறந்து போன குழந்தை எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி சென்றது, வடக்கில் இருந்த தெற்கு நோக்கி சென்றது, வாகனம் கிழக்கில் இருந்து மேற்காக சென்றது. விபத்து நடந்தவுடனே இறந்த குழந்தையின் உறவினர்களுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் சத்தம் கேட்டு அவர்களே வந்து விட்டார்கள். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி வளைவான பகுதியா

என்றால் இல்லை, ஒரே நேர்ரோடு தான். வளைவான பகுதி என்று சொன்னால் தவறு என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்மதாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் புதுக்கோட்டை மருத்துவ கல்லூரி மருததுவமனையில் வைத்து விசாரித்தார்கள். முதல் விசாரணையில் விபத்தில் சம்மந்தமுடைய பொலிரோ வாகனம் ஒட்டுநரின் பெயர் , தகப்பனார் பெயர் , ஊர் போன்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

4. போலிசார் என்னை வழக்கு சம்பவத்திற்கு மறுநாள் விசாரிக்கும் மேற்சொன்ன விவரத்தை தான் சொன்னேன் என்றால் சரிதான். குழந்தையின் அத்தை பரமேஷ்வரியின் அப்பா, அம்மா ஆகியோர்கள் எனது ஊர்க்காரர்கள், சொந்தக்காரர்கள் என்றால் சரிதான். அ.சா.3 விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லக்கூடிய வாகனம் எந்ததிசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தது என நீதிமன்ற விசாரணையில் குறிப்பிட்டுள்ளரோ அது சரியானாதா என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும் போது வழக்கு சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்த விவரத்தை மட்டும் கூறினேன் எனறால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எந்த இடத்தில் எதற்காக இருந்தேன் என்று போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லை என்பதால் போலிசார் விசாரணையிலும், நீதிமன்ற விசாரைணியிலும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

5. முதல் விசாரணையில் சொல்லியது போல் எதிரிக்கும், இநத் வழக்கு சம்பவத்திற்கும், எந்த வித சம்மந்தமும் இல்லை எனறு சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லக்கூடிய வாகனம் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்து போன குழந்தை உறவினர் குழந்தை என்பதால் இழப்பீடு பெறுவதற்காக அவர்களது உறவினர்கள் கொடுத்த புகாரில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியது போல் வழக்கில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் எதிரி சாலை விதிகளை கடைபிடித்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும இடம் கடைவீதி என்பதாலும், மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பதாலும், வேகத்தடை உள்ள பகுதி என்பதாலும், மெதுவாகவும், ஹாரன் அடித்தும், சாலைவிதிகளை பின்பற்றி வரும் போது ரோட்டிற்கு எதிர்புறம் அவர்தகளது அத்தை அலைபேசியில் பேசிகொண்டு கவனக்குறைவால் குழந்தையை கவனிக்காமல் அழைத்ததால் குழந்தை குறுக்கே வந்து யோகிதாவின் அத்தையின் கவனக்குறைவாலும், சிறுகுழந்தையின் அறியாமையாலும், விபத்து சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. வழக்கிற்காக இறந்து போன குழந்தையின் அத்தை சம்பவ இடத்தில் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.